**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS .115/2022**

**14.10.2025.**

**PW- 1**

**வா.சா.1. சசிக்குமார், த/பெ.முத்து அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

தாவா வழக்கில் கண்டுள்ள சொத்து 1ம் பிரதிவாதி ரேவதி பெயரில் தான் உள்ளது என்றால் – சரிதான். தாவா சொத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் – சரியல்ல. நான் பணம் கொடுத்துதான் 1ம் பிரதிவாதி பெயரில் சொத்து வாங்கியுள்ளேன் என்று பத்திரத்தில் கண்டுள்ளதா என்றால் – இல்லை. நான் வெளிநாட்டிலிருந்து அனுப்பிய பணத்தில் தான் வாங்கினோம். தாவா சொத்தை 5ம் பிரதிவாதி வங்கியில் தாவா சொத்தை அடமானம் வைத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் – அதுபற்றி எனக்கு தெரியாது. 5ம் பிரதிவாதி வங்கியில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தை அடமானம் வைத்துள்ளதால் யார் பெயரில் அடமானம் வைக்கப்பட்டுள்ளதோ அவர் பெயரில் தான் ஆவணம் வைப்பு (MOD) எழுதிக்கொடுக்கப்படும் என்றால் – சரிதான். 5ம் பிரதிவாதி வங்கியில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளதால் அவரிடம் தான் ஆவணத்தை ஒப்படைக்க முடியும் என்றால் – சரியல்ல. நான் 1ம் பிரதிவாதியின் கணவர். 1ம் பிரதிவாதிக்கும் எனக்கும் விவாகரத்து வழக்கு திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதா என்றால் – உள்ளது. 5ம் பிரதிவாதி வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்றால் – சரியல்ல. 5ம் பிரதிவாதியை வழக்கிலிருந்து நீக்கவேண்டியது அவசியம் என்றால் – சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/– எஸ். முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.